மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எஸ். எஸ். ஆர். அவர்கள் குறிப்பிட்டது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முடிந்து போன பிறகு இப்படி எழுந்திருந்து பேசுவது முறையல்ல.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி கடன் வழங்கும் திட்டம்.

*வினா எண். 14—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கு வழங்கப்படும் கல்விக் கடன் ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கிடைக்க வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் ஆசிரியர்கள் உட்பட, கல்லூரிகள் மற்றும் பல தொழில் நுட்பப் பயிலகங்களில் படிப்பதற்கு அவர்களது பிள்ளைகளுக்கு கல்விச் செலவுக்கு கடன் வழங்க 28—6—1980 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 995—ல் உத்திரவு வெளியாகியுள்ளது.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள்.

*வினா எண். 15—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டில் (1980—81) மருத்துவ கல்லூரிக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் முறையே எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—585, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—176.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS